1971 டிசம்பர் 18]

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, திருப்பூரில் பல்லடம் ரோட்டில் கலாபத்தூர் கிராமத்தில் ஒரு பள்ளமான பகுதி இருக்கிறது. மழைக் காலத்தில் ஏராளமாகத் தண்ணீர் வருகின்றபோது, அங்கே தண்ணீர் தேங்கி போக்குவரத்துத் தடைப்படுகிறது. எனவே அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் குறிப்பிட்டது மூலக் கேள்வியோடு தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இருப்பினும் அவரது கோரிக்கை கவனிக்கப்படும்.

(சில உறுப்பினர்கள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: யார் கேள்வி கேட்பது, யார் பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஆகவே உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் அவரவர் இடத்தில் இருப்பது நல்லது.

சிங்காநல்லூரில் மனைவள வங்கி

***578. வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் நகரத்தில், மனைவள வங்கியொன்று அமைத்திட தொடக்க வேலைகள் முடிக்கப்பட்டு, அத் திட்டம் அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளதா ;

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

(உ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) முதல் (உ) வரை கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் நகரத்தில் மனைவள வங்கி யொன்று அமைக்கும் திட்டத்திற்கு ஆணை எண் 464, கூட்டுறவு, 31—10—1970 தேதியில் அரசு அனுமதி அளிக்கப் பட்டது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அந்த வங்கியினுடைய தலைவராக யாரையாவது நியமித்திருக்கிறார்களா? அப்படியானால், யார் தலைவர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே. அந்த வங்கிக்குத் தலைவர் நியமிக்கப்பட்டு, 23—8—1971-லேயே வங்கி செயல்படத் தொடங்கிவிட்டது. தலைவர் பெயர் தெரியவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அந்த வங்கியின் சீஃப் பிரமோட்டராகப் பொறுப்பு வகித்து வந்தவர் நகர மன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார். ஆனால் அவரைத் தலைவராகப் போடாமல் வேறு ஒருவரைப் போட்டதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் விபரம் அறிந்து சொல்லலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒருவரைத் தலைவராகப் போட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அவர் யார் என்பது பற்றிய விபரமும் அமைச்சரிடம் இருக்க வேண்டும். அவரைப் போட்டிருப்பதற்கு ஏதாவது தனிக் காரணங்கள் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்குத்தான் தனிக் கேள்வி போடச் சொல்லிவிட்டாரே. தனியாகக் கேளுங்கள். பதில் சொல்லுவதும் சொல்லாததும் அமைச்சருடைய விருப்பம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, வங்கி 23—8—1971 முதல் செயல்படத் தொடங்கிவிட்டதால் நிச்சயமாக அதற்கு ஒரு தலைவர் இருப்பார். தலைவர் இல்லாமல் வங்கி தொடங்கப்பட்டிருக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் சொன்னேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அந்த வங்கி ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தவர்கள், அதற்காகப் பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து, அதற்காகப் பணியாற்றியவர்களை விட்டுவிட்டு, அதற்குச் சம்பந்தமில்லாதவர்கள் வங்கியின் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, யார் யார் அந்த வங்கிக்காகப் பணியாற்றினார்களோ அவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திருச்செந்தூரில் பனங்கற்கண்டு தொழிற்சாலை

*** 579. வினா—திரு கே. என். குமாரசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூரில், கூட்டுறவுத் துறையின் மூலம் பனங்கற்கண்டு தொழிற்சாலை நிறுவும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?